# தல்வாக்கொல்லை – லிந்துலை நகரசபை

# நுவரேலியா மாவட்டம்

-----------------------------------------

## 1. நிதிசார் கூற்றுக்கள்

## 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 பெப்ரவரி 28 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2011 பெப்ரவரி 28 ஆந் திகதியன்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 ஏப்ரல் 26 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

## 1.2 அபிப்பிராயம்

தலைவருக்கு அனுப்பிக்கப்பட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் காரணமாக, கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தலவாக்கொல்லை – லிந்துலை நகரசபையின் 2011 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் தொடர்பான அபிப்பிராயத்தை என்னால் வெளியிட முடியாதுள்ளது.

## 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு விலைப்பட்டியலிடப்பட வேண்டிய விடுதி வாடகையாகிய ரூபா 6,856,972 கணக்கிலிடப்படவில்லை.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 523,663 கூட்டுத்தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2011 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 6,232,667 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 2,695,583 ஆகும்.

### 2.2 வருவாய் நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன

மீளாய்வாண்டின் பொருட்டுத் தலைவர் சமர்ப்பித்த மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய் மற்றும் வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | வருவாய் விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா’000 | ரூபா’000 | ரூபா’000 |
| (i) | தீர்வையும் வரியும் | 3,605 | 2,026 | 2,815 |
| (ii) | குத்தகை வாடகை | 2,482 | 2,860 | 563 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,454 | 754 | - |
| (iv) | பிற வருவாய் | 1,761 | 777 | 1,931 |

#### 2.2.2 நீதிமன்றத் தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமும்

மாகாண சபையின் தலைமைச் செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டியிருந்த தொகை கீழே காணப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்றத் தண்டப்பணம் | 1,603,237 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 240,000 |

### 2.2.3 விடுதிக் கட்டணம்

மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு சபை பெறவேண்டியிருந்த விடுதிக் கட்டணமாகிய ரூபா 6,856,972 கணக்கிலிடப்படவில்லை.

### 2.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ) நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 159(1) ஈ பிரிவிற்கு முரணாக, வரவேற்பு விழாவிற்கு ரூபா 20,159 செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) மத்திய மாகாண சபை நிதிசார் விதிக் கோவையின் 48(1) பிரிவிற்கு முரணாக, சபை தலைமைச் செயலாளர் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோரது அங்கீகாரத்தைப் பெறாது 17 ஊழியர்களை ஆட்சேர்த்து மீளாய்வாண்டின் போது ரூபா 1,723,488 சம்பளம் வழங்கியிருந்தது.

### 2.4 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான பௌதீக வளங்கள்

ஆயுர்வேத வைத்திய உத்தியோகபூர்வ மனை மற்றும் கலாசார மண்டபம் என்பன குறைவாகப் பயன்படுத்தப்பட்டவாறிருந்தமை கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்டது.

### 2.5 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

(அ) சபைக்குரிய லிந்துல பிரதேசத்தில் அமைந்துள்ள மயானத்தை வெளி ஆட்களும் நிறுவனங்களும் அனுமதியின்றிப் பயன்படுத்தியிருந்தனர். அதன் உரிமையை உறுதி செய்துகொள்வதற்குத் தேவையான சட்டபூர்வ நடவடிக்கைகள் பின்பற்றப்படவில்லை.

(ஆ) 2007 ஆம் ஆண்டில் நன்கொடையாகச் சபைக்குக் கிடைத்த ரூபா 1,500,000 பெறுமதியான தீயணைக்கும் வாகனம் மற்றும் 6 தீயணைக்கும் உபகரணங்கள் என்பன எதுவித பாவனையுமின்றி சபையின் வளாகத்தில் வைக்கப்பட்டிருந்தன.

### 2.6 செயற்திறன்

(அ) வருடாந்த செயல் திட்டத்திற்கிணங்க நடப்பதை உறுதிசெய்வதற்கு நிதி மற்றும் உருப்படிச் செயற்திறன் என்பவற்றைக் காட்டும் முன்னேற்ற அறிக்கைகளும் நிர்வாக அறிக்கைகளும் தயாரிக்கப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான வரவு, செலவுத்திட்டத்தில் மூலதனச் செலவினம் உள்ளடக்கப்படவில்லை.

## 2.7 ஒப்பந்த நிர்வாகம்

---------------------------------

### செயற்திட்ட அமுலாக்கலில் தாமதம்

-----------------------------------------------------------

ஒப்பந்தகாரர் வேலையைத் தாமதித்த காரணத்தால் 13 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதில் நீண்டதாமதம் நிலவியது.